செய்தி வெளியீடு எண்: 048 நாள் : 21.01.2016

பொது (தேர்தல்கள்–7)த் துறை

## செய்தி வெளியீடு

இந்திய தேர்தல் ஆணையம், தேர்தல் நடைமுறைகளில் வாக்காளர்களின் பெருமளவு பங்கேற்பிற்காக (SVEEP) 'முறையாக வாக்காளருக்கு அறிவூட்டல் மற்றும் தேர்தல் நடைமுறைகளில் பங்கேற்றல்' என்ற நோக்கத்தினை மையமாகக் கொண்டு செயல்படுகிறது. இதன் விளைவாக, இந்திய தேர்தல் ஆணையம் "வாக்காளர்களின் விழா, 2016" என்ற உலகளாவிய பொருட்காட்சியினை ஜனவரி மாதம் 14 முதல் 17ஆம் தேதி வரை புது தில்லியில் நடத்தியது. இதில் ஒவ்வொரு மாநிலத்திலும் பின்பற்றப்பட்ட சிறந்த தேர்தல் வழிமுறைகளை அந்தந்த மாநிலங்களின் காட்சியரங்கமாக பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது.

இவ்விழாவில் பல்வேறு கருத்தரங்கம், கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு இடையேயான போட்டிகள் மற்றும் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. மேலும், ஜனவர் 16,2016 அன்று மாநிலங்களுக்கிடையேயான கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. தமிழ்நாட்டின் சார்பாக திருச்சியைச் சேர்ந்த திரு.ச.சத்யன் என்பவரின் தலைமையிலான பரதாலயா கலைக்குழு மாநிலங்களுக்கிடையேயான கலைநிகழ்ச்சி போட்டியில் பங்கேற்று, இந்திய அளவில் இரண்டாவது பரிசை வென்றது.

விழாவின் இறுதி நாளான ஜனவரி 17, 2016 அன்று தேர்தல் விழிப்புணர்விற்காக தாமாகவே முன்வந்து இந்திய தேர்தல் ஆணையத்துடன் இணைந்து பணியாற்றிய மாநிலங்களைச் சார்ந்த பிரபலங்களை ஊக்கப்படுத்தும் விதமாக சிறப்பு நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தொலைக்காட்சியின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் திரு. கோபிநாத் அவர்கள், 17.01.2016 அன்று இந்திய தேர்தல் ஆணையம் நடத்திய நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் சார்பாக பங்கேற்று கௌரவிக்கப்பட்டார்.

தலைமைத் தேர்தல் அதிகாரி
தமிழ்நாடு

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**